1973

உ

சிவமயம்.

# பெரியபுராணச் சரித்திர வெண்பாமாலை.

இதில் முன்னடி இரண்டும் நாயன்மார் சரித்திரம்,
பின்னடி இரண்டும் நாயனார் திருக்குறள்,
கருத்துரையுடன்.

இஃது
திருவலஞ்சுழி மிராசு
T. V. கலியாணசுந்தரம்பிள்ளையவர்களால்
பார்வையிடப்பட்டு,

மேலத்திருப்பூந்துருத்தி
கிராமமுன்சீப்
ஆறுமுகமுதலியாரவர்கள்
வேண்டுகோளால்

உறையூர்
சோ. சோமசுந்தரமுதலியாரால்

கும்பகோணம்
லக்ஷ்மிவிலாஸ் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1916.

இதன்விலை அணு 2.

# திருக்குறள் விபரம்

திருக்குறள் அதிகாரம் (௱௩௰௩-ல்) காமத்துப்பால் அதிகாரம் (உரு) நீக்கி மற்றய அதிகாரம் (௱அ-லும்) ஒவ்வொருகுறளும் அதன் கருத்துரையும் நாயன்மார்களின்சரித்திரத்தில் அடங்கியதுபோக மற்றயகுறளும் அதன் கருத்துரையும் வல்லம் சு. பொன்னுசாமி பிள்ளையவர்க[ள்] விரும்பியவாறு இப்புத்தகத்திற் கண்டுகொள்க. நாயன்மார்கள் சரித்திரவெண்பாவில் காமத்துப்பாலிலுள்ள சில குறள்களும் கலந்திருக்கின்றன.

## [கா]ப்புவெண்பா.

### இஃதியற்[றி]யவர் பெயரும் வருணமும்.

பன்னுகலைக் குமரபாரதியா மாமுனிவன்
சொன்னதமிழ்மாலை துதிப்பதற்கு—மின்னுதலை
யாயிரநா வாயிரத்தோ னன்றி யெவர்கொலோ
மாயிருஞாலத்தின் மகிழ்ந்து.

### பாயிரம்.

1 தூண்டாவிளக்கருள்செய் தொண்டத்தொகையினம்பி
யாண்டாரந்தாதிமுறை யன்பானோர்க்—கீண்டியன்ற
வள்ளுவர்நூல்வெண்பாவ குத்துரைப்பனுரையூர்ப்
பிள்ளையாரைத் தொழுதுபின்.

2 தூயதிருத்தொண்டத் தொகைதந்துசுந்தரர்தா
மாயிருஞாலத்தோரை வாழ்வித்தா—ராயதெவன்
கைம்மாறுவேண்டா கடப்பாடுமாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோவுலகு.

(இவை உஉ-வது அதிகாரம் ஒப்புரவறிதல் க-வது குறள்.)

கருத்துரை:— மேகங்களுக்கு ஒப்பானவர் செய்யும் காரங்கள் பிரதி உபகாரங்களை வேண்டுவனவல்ல. (உ)

3 மைவைத்தகண்டர் மறைவாக்கினூற்புகழ்ந்த
சைவத்தலைவ ரன்புசாற்றுவல்யான்—கைவைத்
தரங்கின்றி வட்டாடியற்றேகிரம்பிய
நூலின்றிக் கோட்டிகொளல்.

(இவை சுக வது அதிகாரம் கல்லாமை க-வது குறள்.)

கருத்துரை:— ஒருவன் கல்வியைக்கற்காமல் சபையில் ஒன்றைச் சொல்லல் வகுப்பிடம் இல்லாமல் சூதாடியது போலும். (௩)

இப்புத்தகத்தின் ஊதியம் தஞ்சை வடக்குவீதி இரத்தினகிரீசுவரர் [ஆ]லயத்தில் தட்சணாமூர்த்தி சன்னிதியின் தீபத்திற்கு உபயோகிக்க[ப்]படும்.

## நூல்.

4168

### தில்லைவாழந்தணர்.

1 பூவாயிரம்பேர்புகழ் கூத்தரைத்தில்லை
மூவாயிரம்பேர்முத லெனக்கொண்—டோவா
ரகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன்முதற்றே யுலகு.

(இவை க-வது அதிகாரம்) க-வது குறள்)

•கருத்துரை:— எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன, அதுபோல உலகம் கடவுளை முதலாக உடையது. (க)

### திருநீலகண்ட நாயனார்.

2 ஆலகண்ட ராணைகொண்டில்லா ளெதிர்செல்லாதுதிரு
நீலகண்டரைம் பொறிமாநீக்கினர்—மேலா
முரனென்னுந் தோட்டியானோ ரைந்துங்காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர்வித்து.

(இவை ௩-வது அதிகாரம் நீத்தார்பெருமை ௪-வது குறள்.)

கருத்துரை:— ஐம்பொறிகளையும் ஐம்புலன்களிற் செல்லாமற் காப்பவன் மோட்சநிலத்திற்கு வித்தாவான். (உ)

### இயற்பகை நாயனார்.

3 மயற்பகையுள்ளுவப்ப மாதவர்க்கில்லாளை
யியற்பகையிகழ்ந்தெள்ளா திந்தான்—செயற்பா
லிகழ்ந்தெள்ளா தீவாரைக்காணின் மகிழ்ந்துள்ள
முள்ளுளுவப்பதுடைத்து.

(இவை ௱௬-வது அதிகாரம் இரவு எ-வது குறள்.)

கருத்துரை:— பொருள் கொடுப்பவரைக் கண்டால் யாசிப்பவர் மனமகிழ்ச்சி அடைவார். (௩)

## இளையான்குடிமாற நாயனார்.

4 உய்வித்தவனடியார்க் கோரிருளிற்போய்மாறன்
செய்வித்தும் வாரியனஞ்செய்தானே—மெய்வருந்தி
வித்துமிடல்வேண்டுங் கொல்லோவிருந்தோம்பி
மிச்சின் மிசைவான்புலம்.

(இவை கூ-வது அதிகாரம் விருந்தோம்பல் ரு-வது குறள்.)

கருத்துரை:— விருந்தினரைக் காப்பவன் விளைநிலம் தானேவிளையும். (ச)

## மெய்ப்பொருணாயனார்.

[பொருளாய்
5 பொய்ப்பொருண்மாற்றான்புரிந்த பொய்தவவேடம்
மெய்ப்பொருளார் கண்டவிதந்தானே—மெய்ப்பொரு
ளெப்பொருளெத்தன்மைத் தாயினுமப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

(இவை சங-வது அதிகாரம் அறிவுடைமை ங-வது குறள்.)

கருத்துரை:— எந்தப்பொருளை எவர்வாயினாற்கேட்பினும் அந்தப்பொருளின் உண்மைப்பொருளைக் காண்பதே அறிவாம். (ரு)

## விறன்மிண்ட நாயனார்.

6 அறன்மண்டு சுந்தரனையாரூரரனை
விறன்மிண்டர் தாமேவெகுண்டார்—மறமன்
னுருதவர்போற் சொலினுஞ்செறுஅர்சொ
லொல்லையுணரப்படும்.

(இவை எய-வது அதிகாரம் குறிப்பறிதல் கூ-வது குறள்.)

கருத்துரை:— புறம்பாகக் கடுஞ்சொற் சொல்லினும் உள்ளேபகையாதவர் சொல் சீக்கிரம் அறியப்படும். (சா)

## அமர்நீதி நாயனார்.

7 திரம்புபொருள் சேயொடமர்நீதிமனையாளோ
டரன்கோவணத் தட்டதனே—ரிருந்தார்
சமன்செய்துசீர்தூக்குங் கோல்போலமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி.

(இவை ௰௨-வது அதிகாரம் நடுவுநிலைமை அ-வது குறள்.)

கருத்துரை:— ஒருபக்கமும் சாயாமையே பெரியோர்க்கு அழகு. (எ)

சுந்தரமூர்த்தி நாயனர்,

8 அளந்தருள்செம்பொன்மணி முத்தாற்றிலிட்டாரூர்க்
குளந்தனிலேகண்டெடுத்துக் கொண்டா—ருளேந்து
பரியினுமாகாவாம் பாலல்லவுய்த்துச்
சொரியினும் போகா தம.

(இவை ௩௪-வது அதிகாரம் ஊழ் ௬ வது குறள்.)

கருத்துரை:— ஊழினலே தமக்குச் சொந்தமாகாப் பொருள்களைக் காப்பாற்றினலும்இல்லாவாம், சொந்தமாகும் பொருள்களைப் புறம்போக்கினலும் போகாவாம். (அ)

எறிபத்த நாயனர்.

9 பத்தர்பூமூளிபறித்தகரி பாகரைக்கொன்
றித்தலமேவந்தஞ் சவெறிபத்தர்—கைத்தார்
குணமென்னுங்குன்றேறி நின்ருர்வெகுளி
கணமேயுங் காத்தலரிது,

(இவை ௩-வது அதிகாரம் நீத்தார்பெருமை ௯-வது குறள்.)

கருத்துரை:— முனிவாது கோபம் கோபிகளுக்கு முன்குணம் தோன்றுவாம். (௯)

ஏனுதிநாத நாயனர்.

10 தானுகவெல்லாதான் றன்னுதல்விபூதியைக்கண்
டேனுதிநா தரிக விழந்தா—ரானத
சால்பிற்குக்கட்டளை யாதெனிற்றேல்வி
துலையல்லார் கண்ணுங்கொளல்.

(இவை கூ௰கூ-வது அதிகாரம் சான்றாண்மை கூ-வது குறள்.)

கருத்துரை:— பெருமைக்கு உரைகல் எதுவெனில் இழிந்தவரிடத்தும் தோல்விகொள்ளுதலாம். அதாவது கல்லினிடத்து பொன்றேய்ந்து பெருமையடைவது என்று பொருள்கொள்க. (௰)

## கணணப்ப நாயனார்.

11 புண்ணப்பர்கண்ணிலென்று புன்கணுறுப்பீர்ந்தப்பிக்
கண்ணப்பரன் புறுப்பிற்கைசெய்தா—வண்ண
புறத்துறுப்பெல்லா மெவன்செய்யும்யாக்கை
யகத்துறுப்பன் பிலவர்க்கு.

(இவை அ-வது அதிகாரம் அன்புடைமை கூ-வது குறள்.)

கருத்துரை:— உள்ளன்பு இல்லாதார்க்குப் பிற உறுப்புகள் இருந்துபயனில்லை. (௧௧)

## குங்கிலியக்கலைய நாயனார்.

12 தலையன்பின்னார்வளைந்தார் தம்மைநிமிர்த்திட்டான்
கலையன்பின்கா ணிடுக்கண்காணான்—மலைவின்
மடுத்தவாயெல்லாம் பகடன்னானுற்ற
விடுக்கணி டர்ப்பாடுடைத்து.

(௬௩-வது அதிகாரம் இடுக்கணழியாமை ச-வது குறள்.)

கருத்துரை:— தொழில் செய்யவல்லவனை அடைந்த துன்பமானது தானே துன்பப்படும். (௧௨)

## மானக்கஞ்சாற நாயனார்.

13 பஞ்சவடிக்கென்று சிவபத்தர்க்குவப்பமண
வஞ்சுவைதமென்கூந்த லரிந்தீந்தார்—கஞ்சாற
ரீத்துவக்குமின்பமறியார் கொல்முடைமை
வைத்திழக்கும் வன்கணவர்

(இவை உ௩-வது அதிகாரம் ஈகை அ-வது குறள்.)

கருத்துரை:— பொருளைத்தேடிவைத்து இழப்பவர் கொடுத்துமகிழும் இன்பத்தை அறியார். (௧௩)

## அரிவாட்டாய நாயனார்.

14 போயகமர்மாவடுவும் புண்ணியர்வாயிற்கொளவே
தாயர்களத்தூறுவடுத் தான்கொண்டார்—வீயாரோ
சாதலினின்னாத தில்லையினிததூஉ
மீதலியையாக்கடை.

(இவை உ௩-வது அதிகாரம் ஈகை ௮-வது குறள்.)

கருத்துரை:— இறத்தலைவிடத் துன்பம் இல்லையே யாயினும் யாசிப்பவர்க்குக் கொடுக்க இசையாதகாலத்து இறத்தலே இன்பம்தரும். (கச)

## ஆனாயநாயனார்.

15 ஆனாயர்வேயிசையில்லஞ் செழுத்தேயஞ்செவிச்செந்
தேனாயரனுக்கந்திக் களித்தார்—கானிற்
பொருள்கருவிகாலம் வினையிடனோடைந்து
மிருடீர வெண்ணிச்செயல்.

(இவை கூ௮-வது அதிகாரம் வினைசெய்வகை ரு-வது குறள்.)

கருத்துரை:—பொருளும், சாதனமும், காலமும், தொழிலும், இடமும், இவ்வைந்தும்நினைத்து தொழில் செய்யக் கடவன். (கரு)

## சுந்தரமூர்த்திநாயனார்.

16 ஆதியிலாரூரர்க் கழுதாக்கவேபரவை
வீதியெல்லாம் நெல்லாய்விளைந்ததே—நீதியா
வில்லதெனில்லவண் மாண்பானாலுள்ளதெ
னில்லவண் மாணாக்கடை.

(கூ-வது அதிகாரம் வாழ்க்கைத்துணைநலம் ௩-வது குறள்.)

கருத்துரை:— இல்லறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கை உடையவளாகில் இல்லாதது ஒன்றுமில்லை. அம்மனைவி நற்குண நற்செய்கை இல்லாதவளாகில் உள்ளது ஒன்றுமில்லை. (கசு)

## மூர்த்திநாயனார்.

17 சேர்த்திமுழங்கையெலும்புந்தேயச் செஞ்சந்தனமா
மூர்த்திமதுரேசருக்கு முன்பரைத்தார்—பார்த்தீரோ
வன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையா
ரென்புமுரியர் பிறர்க்கு.

(இவை அ-வது அதிகாரம் அன்புடைமை உ-வது குறள்.)

கருத்துரை:— அன்பில்லாதவரது எல்லாப் பொருள்களும் அவர்க்கே உரியன அன்புடையவர் எலும்பும் பிறர்க்கே உரியனவாம். (கஎ)

## முருகநாயனார்.

18 மட்டார்தார்கண்ணிவகை சிவபூசைக்கொருநாண்
முட்டாதுசெய்தார் முருகனார்—விட்டாரோ
வீழ்நாள்படாமை நன்றாற்றினஃதொருவன்
வாழ்நாள வழியடைக்குங்கல்.

(இவை ச-வது அதிகாரம் அறன்வலியுறுத்தல் அ-வது குறள்.)

கருத்துரை:— ஒருவன் தருமத்தைச்செய்தால் அத்தருமம் அவன் பிறப்பைநீக்கும். (கஅ)

## உருத்திரபசுபதிநாயனார்.

19 உருத்திரமேசொல்லி யுதகத்துள்ளேநின்
றுருத்திர பசுபதியாருற்றார்—திருத்தாள்
தவஞ்செய்வார்தங்கருமஞ் செய்வார்மற்றல்லா
ரவஞ்செய்வா ராசையுட்பட்டு.

(இவை உஎ-வது அதிகாரம் தவம் கூ-வது குறள்.)

கருத்துரை:— தவத்தோர் தவகாரியங்களைச்செய்வார் மற்றவர் அவகாரியங்களைச்செய்வார். (கசு)

## திருநாளைப்போவார்.

20 மூவாயிரமறையோர் மொய்ப்பத்திருநாளைப்
போவார்சிதம்பரத்துட் போயடைந்தா—ரோவாப்
பெருமைக்குமேனைச் சிறுமைக்குந்தத்தங்
கருமமே கட்டளைக்கல்.

இவை ருக-வது அதிகாரம் தெரிந்து தெளிதல் ரு-வது குறள்.

கருத்துரை:— மனிதர் பெருமையையும் சிறுமையை யும் அறியும் உரைக்கல்லாவது அவரவர்தொழில்களாம். உஉ

### திருக்குறிப்புத்தொண்டநாயனார்.

21 தொண்டர்குறிப்பறிந்த தொண்டர்திருக்குறிப்புத்
தொண்டரைத்தங்கந்தை தந்துசோதியராட்—கொண்
குறிப்பிற்குறிப்புணர்வாரை யுறுப்பினுள் [டார்
யாதுகொடுத்துங் கொளல்.

(இவை எக-வது அதிகாரம் குறிப்பறிதல் ரு-வது குறள்.)

கருத்துரை:— மனதில் நினைத்ததைச் சொல்லாமல் அறியவல்லவரோடு அரசர் தம்உறுப்புகளுள் அவர்வேண்டு வது யாதொன்றைக் கொடுத்தாயினும் தமக்குத்துணையாகக் கொள்ளக்கடவர். (உக)

### சண்டேசுரநாயனார்.

22 அறஞ்செய்ததந்தை தாளற்றிடச்சண்டீசர்
மறஞ்செய்கொலை புண்ணியமாய்வாழ்ந்தார்—திறந்தெ
ணல்லவையெல்லா அந்தீயவாந்தீயவு [ரியி
நல்லவாஞ் செல்வஞ்செயற்கு.

(இவை ஈஅ-வது அதிகாரம் ஊழ் ரு-வது குறள்.)

கருத்துரை:— செல்வம் உண்டாதற்கு விதிவசத்தால் நல்லவை எல்லாம் தீயவாம் தீயவை எல்லாம்நல்லவாம்.(உஉ)

### சுந்தரமூர்த்திநாயனார்.

23 ஓராப்பரவைக் குமாபதியைத்தூதாக்கித்
தீராப்புலவியையுந் தீர்த்தாரே—யாரூர
ருப்பமைந்தற்றாற் புலவியதுசிறிது
மிக்காற்று நீளவிடல்.

(இவை ௱௩௰க-வது அதிகாரம் புலவி உ-வது குறள்.)

கருத்துரை:— பிணக்கு புணர்ச்சி இன்பம் செய்தற்கு வேண்டும் அளவுத் தன்மை ஆகுதல் உப்பானது உணவுகளை இன்சுவை ஆக்குதற்கு வேண்டும் அளவுத்தன்மை ஆகுதல் போலும் மிகவிடுதல் அந்த உப்பு அளவு சிறிது மிகுந்தது போலும். (உ௩)

இதுமுதல் ரு வெண்பா திருநாவுக்கரசுநாயனுர்.

24 தரைசேர்சமணீங்கிச் சைவஞ்சேர்நாவுக்
கரைசர்வயிற்று வலியற்ரு—ருரைசேர்ந்த
சார்புணர்ந்துசார்புகெட வொழுகின்மற்றழித்து
சார்தராசார் தருநோய்.

(இவை ௩௬-ம் அதிகாரம்) மெய்யுணர்தல் ௬-வது குறள்.)

கருத்துரை:— ஒருவன் மெய்ப்பொருளை அறிந்து இருவகைப்பற்றுக்களும் கெடநடப்பானாகில் அவனைத்துன்பங்கள் அணுகாவாம் அகப்பற்று, உடல், புறப்பற்று, பொருள்.

25 நீற்றறைநஞ்சானை கடனேருற்ருரப்பருக்கு
மாற்றமணர்பின்னிருந்து வாழ்ந்தாரோ—வாற்றரிய
நோயெல்லாநோசெய்தார் மேலவாநோய்செய்யார்
நோயின்மை வெண்டுபவர்.

(இவை ௩உ-வது அதிகாரம்) இன்னுசெய்யாமை ம-வது குறள்.

கருத்துரை:— துன்பம்எல்லாம் துன்பம்செய்தவர் மேலாகும் துன்பமில்லாமையை விரும்புவோர் துன்பம்செய்யார்

26 மருணீக்கியார்தரும சேனருமாய்நாவுக்
கரசரப்பராகி யின்பமாஞ—ரருளா
லிருணிங்கியின் பம்பயக்குமருணீங்கி
மாசறு காட்சியவர்க்கு.

(இவை ௩௬-ம் அதிகாரம் மெய்யுணர்தல் ௨-வது குறள்.)

கருத்துரை:— விபரீதஞானத்தை நீக்கி மெஞ்ஞானத்தைக்கொண்டவர்க்கு அம்மெஞ்ஞானமே மோட்சத்தைக் கொடுக்கும். (௨௬).

27 விண்களிப்பக்காணுவியன் கயிலைவாழ்வையப்பர்
கண்களிப்பவையாற்றிற் கண்டுவந்தா—ரெண்களிப்ப
கண்ணுடையரென்பவர் கற்றோர்முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

(இவை ௪௰-ம் அதிகாரம் கல்வி ௩-வது குறள்.)

கருத்துரை:— கற்றோரே கண்களுடையவர் என்று சொல்லப்படுவோர் மற்றோரே கண்கள் இல்லாதவரென்று சொல்லப்படுவர். (௨௭).

28 மாமணிபொன்மாத ரெதிர்வந்துறினும்பற்றற்றார்
தாமரன்பால்வந்தரசர் தாழ்ந்தாரோ—வாமெனவே
பற்றற்றகண்ணே பிறப்பறுக்குமற்று
நிலையாமை காணப்படும்.

(இவை ௩௪௫-வது அதிகாரம் துறவு ௬-வது குறள்.)

கருத்துரை:— பற்றற்றபொழுதே பிறப்பு அறும் அறாதபொழுதேபிறப்பு இறப்பின் நிலையாமையானது அறியப்படும். (௨௮).

## குலச்சிறை நாயனார்.

29 நலச்சிறைநீர்வேணியார் நல்லடியார்யார்க்குங்
குலச்சிறையார் தாம்பணிதல் குன்றா—நிலர்க்கிகழா
ரெல்லார்க்குநன்றாம் பணிதலவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந்தகைத்து.

(இவை ௱௨-ம் அதிகாரம் அடக்கமுடைமை ௫-வது குறள்.)

கருத்துரை;— அடக்கம் யாவர்க்கும் நல்லதாகும் அது செல்வர்க்கு மேலும்செல்வம் போலிருக்கும். (௨௯)

## பெருமிழலைக்குறும்பநாயனார்.

30. நாவலர்கோமான்கயிலை நாளைப்போமென்முன்போய்
மேவிமிழலைக்குறும்பர் வீற்றிருந்தார்—யாவருங்கு
இன்னாதினனில்லூர் வாழ்தலதனினு
மின்னாதினியார்ப்பிரிவு.

(இவை ௲௱௯ம் அதிகாரம் பிரிவாற்றாமை ௮-வது குறள்.)

கருத்துரை:— மகளிர்க்குத் தங்குறிப்பறியும் தோழியர் இல்லாத வேற்றூரின், கண்வாழ்தல் துன்பமாகும் மேலும் தங்காதலரைப்பிரிதல் அதனினும் துன்பமாகும்.

## காரைக்காலம்மையார்.

31 என்புருவாலம்மையெள்ளவீசர் நமக்கம்மையென்னு
மன்புருவாள் காரைக்காலம்மைகாண்—முன்பே
யுருவுகண்டெள்ளாமை வேண்டுமுருள்பெருந்தேர்க்
கச்சாணியன்னாருடைத்து.

(இவை ௬௭-ம் அதிகாரம் ௭-வது குறள்.)

கருத்துரை:— உலகம் உருளாநின்றபெரும் தேர்க்கு அச்சாணி போலத்தொழிலில் வலிமையுள்ளோரை உடையது அதனால் வடிவுகண்டு ஒருவரை இகழலாகாது. (௩௧)

## அப்பூதியடிகணாயனார்.

32 அரசனையப்பூதி யடிகளறிவாரோ
யுரைசெயுணர் வாலுறநட்புற்றார்—மருவிப்
புணர்ச்சிபழகுதல வேண்டாவுணர்ச்சிதா
னட்பாங்கிழமை தரும்.

(இவை ௭௯-ம் அதிகாரம் ௫-வது குறள்.)

கருத்துரை:— இருவர்க்கும் ஒத்த அறிவே சினேகம் தரும். (௩௨)

## திருநீலநக்க நாயனார்.

33 நலங்கொடிருநீலநக்கர்நாதர் மேலில்லாள்
சிலம்பிவிழவாய் மருந்துசெய்தாள் —சலங்கொளுமு

ளேய்நாடிநோய் முதனாடியது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச்செயல்.

(இவை கூஉ-ம் அதிகாரம் அ-வது குறள்.)

கருத்துரை:— வைத்தியன் வியாதியையும் அதன் காரணத்தையும் அதுநீக்கும் உபாயத்தையும் ஆராய்ந்து மருத்துவஞ்செய்யக்கடவன். (௩௩)

நமிநந்தியடிகணாயனார்

34 நக்கமணர்வெள்க நமிநந்தியாரூரர்க்கு
மிக்கபுனலாலே விளக்கெரித்தார்— தக்கமனத்
தெண்ணியவெண்ணியாங் கெய்துபவெண்ணியார்
திண்ணிய ராகப்பெறின்.

இவை கூ௬-ம் அதிகாரம் கூ-வது குறள்.

கருத்துரை:— தொழிலில் வலிமையுடையவராகில் நினைக்கப்பட்டபொருளை நினைத்தபடி பெறுவர். (௩௪)

சுந்தரமூர்த்தி நாயனார்.

35 ஆருறுகாட்டாரையாறணையாவாறுபெரு
காருறுகாட்ட நடந்தாரூரர்-பேருணர்
வெள்ளத்தனையவிடும் பையறிவுடையா
னுள்ளத்தினுள்ளக்கெடும்.

(இவை கூ௩-ம் அதிகாரம் உ-வது குறள்.)

கருத்துரை:— அறிவுள்ளவன் உள்ளத்திலே ஒன்றை நினைக்க துன்பமெல்லாங்கெடும், ஒன்றுமோட்சம். (௩௫)

இதுமுதல் ரு-வெண்பா திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்.

36 வாலவயதில் வளர்புகலிப்பிள்ளையார்
போலவிசயம் புரிந்தவரார்— ஞாலமிசைத்
தோன்றிற்புகழொடு தோன்றுகவஃதிலார்
தோன்றலிற்றோன்றாமைநன்று.

(இவை உசு-ம் அதிகாரம் புகழ் கூ-வது குறள்.)

கருத்துரை:— பிறந்தால் புகழோடு பிறக்கக்கடவர் அவ்வாறில்லாதவர்கள் பிறவாமையே நல்லது. (௩௬)

37 பண்ணார்பசுந்தமிழ்ச் சம்பந்தரெதிர்வந்தமண
ரெண்ணாயிரங்கழுவிலேறினா—ரொண்ணாது
வில்லேருழவர்பகை கொளினுங்கொள்ளற்க
சொல்லேருழவர்பகை.

இவை அகூ-ம் அதிகாரம் பகைத்திறந்தெரிதல் உ-வது குறள்

கருத்துரை:— வீரர்பகையைக் கொண்டாலும், மந்திரிகள் பகையைக்கொள்ளாதிருக்கக்கடவன், சொல்லேருழவர் மந்திரிகள். (௩௭)

38 முத்தமிழ்ஞானத்தலைவர் முன்னம்பகைசாரப்
புத்தனெதிர்நின்றிடியிற் பொன்றினா—னித்திரமென்
கூற்றத்தைக்கையால் விளித்தற்றாலாற்றுவார்க்
காற்றாதாரின்னாசெயல்

இவைகூயம்அதிகாரம்பெரியாரைப்பிழையாமைசு-வதுகுறள்.

கருத்துரை:— வல்லமையுடையவர்க்கு வல்லமையில்லாதார் துன்பம் செய்தல் தனக்கு இயமனைக்கையால் அழைத்தல் போலும். (௩அ)

39 ஏறியவோடக்கோலிசை ஞானச்செந்தமிழா
லாறுகடந்தார் தோணிபார்மகனார்—வீறடங்கா
வெள்ளத்தனையமலர் நீட்டமாந்தர்தம்
முள்ளத்தனையதுயர்வு.

(இவை கூயம் அதிகாரம் ஊக்கமுடைமை ரு வது குறள்)

கருத்துரை:— நீர்ப்பூவின் காம்புகளினது நீளம்நின்ற நீரளவினவாம், அதுபோல் மனிதர்க்கு உயர்ச்சியானது அவரவர்களின் மனவூக்கத்தினளவினதாம். (௩௯)

40 கணவனெனக்காதலியைக் காழியர்கைப்பற்றி
மணவறையீசன் கழலாய்வாழ்ந்தார்—குணமே
தலைப்பட்டார் தீரத்துறந்தார்மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்.

(இவை ௩௫ம் அதிகாரம் துறவு ௮-வது குறள்.)

கருத்துரை:— முற்றத்துறந்தவர்கள் முத்திபெறுவர் துறவாதவர் பாசவலையால் பிறப்பில் அழுந்துவர். (௪௰)

### ஏயர்கோன் கலிக்காமநாயனர்.

41 யீசனையாள்வாராம் வந்தென்னையாள்வாரென்று
தாசினியில்மாண்டார் கலிக்காமர்—பேசின்
மருந்தோமற்றூனோம்பும் வாழ்க்கைபெருந்தகைமை
பீடழியவந்தவிடத்து.

(இவை ௯௭-ம் அதிகாரம் மானம் ௮-வது குறள்.)

கருத்துரை:— மானம் அழியவந்தபோது உடலைக் காப்பாற்றும் வாழ்வானது இறவாமைக்கு மருந்தாமோ.

### திருமூலநாயனர்.

42 பரகாயஞ்சேர்ந்தார் பசுக்களாலாய்ச்சி
மருவாமன்மாதவமே வாய்ந்தார்—திருமூல
ரூழையுமுப்பக்கங் காண்பருலைவின்றித்
தாழாது ஞற்றுபவர்.

இவை ௬௨-ம் அதிகாரம் ஆள்வினையுடைமை ௰-வது குறள்.

கருத்துரை:— பயனை விலக்குவதாகிய விதியையும் புறங்காண்பர் அவ்விலக்கிற்குத்தாழாது குற்றமறத்தொழிலை முயல்வோர். (௪௨)

### தண்டியடிகணயனர்.

43 அந்தகனென்றே சுமமணரந்தராயொழியத்
தந்தமொழிசாதித்தார் தண்டியார்—முந்தமொழி

சொல்லுதல்யார்க்கு மெளியயரியவாஞ்
சொல்லிய வண்ணஞ்செயல்.

(இவை கூஎ-அதிகாரம் வினைத்திட்பம் ச-வது குறள்.)

கருத்துரை:— தொழில்செய்வோமென்றல் யார்க்கும் எளிதாம் அதைச்சொல்லியபடி செய்தால் அரிதாம்.

மூர்க்க நாயனார்.

44 உருளாயமும் பொன்னுதவுதன்மூர்க்கர்க்கே
பொருளாய மற்றவர்க்கேபோக்கு—மருளா
மறத்தினூங் காக்கமுமில்லையதனை
மறத்தலினூங்கில்லைகேடு.

இவை ச-ம் அதிகாரம் அறன்வலியுறுத்தல் உ-வது குறள்.

கருத்துரை:— தருமத்தின் மேற்பட்ட செல்வமு மில்லை அத்தருமத்தை மறத்தலைப்பார்க்கிலும் கேடுமில்லை.

சோமாசிமாற நாயனார்.

45 சோமாசிமாறனார் சுந்தரரால்யாகமினி
தாமாறரனை யழைப்பித்தா—ராமாம்
பொதுநோக்கான்வேந்தன் வரிசையாநோக்கி
னது நோக்கிவாழ்வார்பலர்.

(இவை ருக-ம் அதிகாரம் சுற்றந்தழால் அ-வது குறள்)

கருத்துரை:— அரசன் அவரவர்க்குத்தகுதியாய் அறிந்து நடப்பானாகில் அவனைவிடாமல்வாழும் சுற்றத்தார்பலர்.

சுந்தரமூர்த்திநாயனார்.

46 பொருட்டுறையுன்பாட்டே நற்பூசையென்றுரூரர்க்
கருட்டுறையாரன்பு செய்வாரானார்—மருட்டேர்
செவிக்குணவில்லாத போழ்துசிறிது
வயிற்றுக்கு மீயப்படும்

(இவை உஅ-ம் அதிகாரம் கேள்வி உ-வது குறள்.)

கருத்துரை:— காதுக்குக்கேள்வி உணவு இல்லாத் காலத்து வயிற்றுக்கு உணவுகொடுக்கவேண்டும். (சசு)

சாக்கிய நாயனார்.

47 அங்கசன்பூவெல்லா மடுகணையேசாக்கியர்கைச்
செங்கலெல்லாஞ் சங்கரற்குத்தேமலரே—செங்கேழ்
கணைகொடிதியாழ்கோடு செவ்விதாங்கன்ன
வினைபடுபாலாற்கொளல்.

(இவை உஅ-ம் அதிகாரம் கூடாவொழுக்கம் கூவதுகுறள்.)

கருத்துரை:— அம்பு ஒழுங்காயிருந்தும் கொடுமை செய்யும் வீணைவளைந்திருந்தும் இனிமைசெய்யும் அதுபோல் தவத்தோரை அன்பின் நடக்கையிற் கண்டுகொள்க.

சிறப்புலி நாயனார்.

48 எய்தமகிழ்ந்தின் சொலுரைத்தீசனடியார்க்கிதமே
செய்தனமேசெய்தார் சிறப்புலியார்—வெய்துற்றூர்
மோப்பக்குழையு மனிச்சமுகந்திரிந்து
நோக்கக்குழையும்விருந்து.

(இவை கூ-ம் அதிகாரம் விருந்தோம்பல் ய-வது குறள்.)

கருத்துரை:— அனிச்சப்பூமோந்த இடத்துவாடும் விருந்தினர் முகம்வேறுபட்டுப் பார்க்கவாடும். (சஅ)

சிறுத்தொண்ட நாயனார்.

49 காய்க்கறிவேறென்று தொடாக்கள்ளவயிரவர்க்கோர்
சேய்க்கறிசெய்திட்டார் சிறுத்தொண்டர் வாய்க்கினிதா
யின்னுதிரக்கப் படுதலிரந்தவ
ரின்முகங்காணுமளவு.

(இவை உரு-வது அதிகாரம் ஈகை சவது குறள்)

கருத்துரை:— இரப்பவர் இனியமுகத்தைக் காணுமளவும் இரத்தலும் துன்பமேயாம். (சகூ)

இதுமுதல்உ-கவி சேரமான்பெருமாணயனார்.

50 நெறிவார்சடையனைப் போனீணிலத்தோர்செய்கை
யறிவார் கழறிற்றறிவா—ரறிவார்சா

ரெல்லார்க்குமெல்லா நிகழ்பவையெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன்றொழில்.

(இவை ருகூ-ம் அதிகாரம் ஒற்றாடல் உச-வது குறள்.)

கருத்துரை:— எல்லாரிடத்தும் நடப்பன எல்லாவற்றையும், தினந்தோறும்ஒற்றனாலேவிரைந்தறிதல் அரசனுக்கு உரியதொழிலாம்-ஒற்றன்-உழவாளி. (ருய)

51 சேரர்கோனீதித்திர வியங்கள் சுந்தரர்பாற்
சோரர்கவர்ந்தொளித்துஞ் சோர்வுண்டோ—பாரி
லழக்கொண்டவெல்லாமழப் போமிழப்பினும்
பிற்பயக்கு நற்பாலவை

(இவை சுசு-ம் அதிகாரம் வினைத்தூய்மை கூ-வது குறள்.)

கருத்துரை:-பிறன்அழக்கொண்டபொருள்யாவும்தான் அழப்போகும், நல்வழியால்வந்த பொருள்களை முன் இழந்தானாயினும் பின்பயன்கொடுக்கும். (ருக)

கணநாத நாயனார்.

52 நாட்டிலடியாரையெல்லாநாதன் பணிவிடையே
காட்டிவாழ்வித்தார் கணநாதர்—வேட்டிவர்தாஞ்
செய்யாமற்செய்த வுதவிக்குவையகமும்
வானகமுமாற்றலரிது.

(இவை யக-ம் அதிகாரம் செய்நன்றியறிதல் க-வது குறள்.)

கருத்துரை:—ஒருவன்பிறர் உதவிவேண்டாது செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் தந்தாலும் ஒத்தல் அரிது.

கூற்றுவ நாயனார்.

53 ஆற்றரிதாமீசனடி முடியாகப்புனைந்து
போற்றிமனக்கவலை போக்கினார்—கூற்றர்
தனக்குவமையில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது.

(இவை க-வது அதிகாரம் கடவுள் வாழ்த்து எ-வது குறள்.)

கருத்துரை:— கடவுளுடைய திருவடியைச் சேராதவர்களுக்கு மனக்கவலை நீக்குதல் இல்லை. (ருங)

### சுந்தரமூர்த்தி நாயனார்.

54 ஆரூரரீசனைத் தூதாக்கிய நாட்கூன்குருடு
தாரோடுதாம்பூலந் தாங்கவினை—தீர்வார்
நிறைமொழிமாந்தர் பெருமைநிலத்து
மறைமொழி காட்டிவிடும்.

(இவை ச-ம் அதிகாரம் நீத்தார் பெருமை) அ-வது குறள்.

கருத்துரை:—நிறைந்த மொழியினையுடைய துறந்தார து பெருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களேகாட்டும், மொழி, மந்திரம், (ருச)

### பொய்யடிமையில்லாத புலவர்.

55 மதுரையிலேழேழ் புலவர்வல்லசிவன்பாத
மதுபொருளாகக்கவி செய்தாரே—புதுமையே
கற்றதனாலாயபயனென் கொல்வாலறிவ
னற்றாடொழாரெனின்.

(இவை க வது அதிகாரம் கடவுள் வாழ்த்து உ-வது குறள்.)

கருத்துரை:—கடவுளை வணங்காராகில் கற்றதனாற்பயனில்லை. (ருரு)

### புகழ்ச்சோழ நாயனார்.

56 தங்களத்தில்வீழ்ந்த சடைத்தலைகண்டஞ்சியஞ்சி
பொங்கழற்குள்வீழ்ந்தார் புகழ்ச்சோழ-ரெங்குமறுத்
தீயவைதீயபயத்த லாற்றீயவை
தீயினுமஞ்சப்படும்.

(இவை உக-ம் அதிகாரம் தீவினையச்சம். உ-வது குறள்.)

கருத்துரை:—பாவமானவை துன்பங்களை கொடுத்தலால் அவைகள் அக்கினியிலும் கொடியனவாம். (ருசா)

### நரசிங்கமுனையரைய நாயனார்.

57 மூரிநரசிங்கமுனையரையர் மாதவருட்
சீரியதூர்த்தர்க்கிரட்டி செய்தாராம்—பூரிதா
னற்றமறைக்கும் பெருமைசிறுமைதான்
குற்றமே கூறிவிடும்.

(இவை ௯௰௬-ம் அதிகாரம் பெருமை ௰-வது குறள்.)

கருத்துரை;— பெரியோர் பிறர் அவமானத்தை மறைப்பர் சிறியோர் பிறர் குற்றத்தைச்சொல்லுவர் (௫௭)

அதிபத்த நாயனார்.

58 மேனாட்செல்வங்கெடினு மீன்வலைவீசிக்கோரொண்
மீனாளும் விட்டாரதிபத்த—ராணு
திடனில்பருவத்து மொப்புரவிற்கொல்கார்
கடனறி காட்சியவர்.

(இவை ௨௨-ம் அதிகாரம் ஒப்புரவறிதல் ௮-வது குறள்.)

கருத்துரை:— அறிவுடையோர் வறுமையிலும் உதவி செய்தற்குக் குறைவுபடார். (௫௮)

கலிக்கம்ப நாயனார்.

59 மெய்யடியார்தானில்லாள் வெள்கக்கழுவிவாள்
கையடியங்கீர்ந்தார் கலிக்கம்பர்—பொய்யடிக்கொண்
டில்லாளையஞ்சுவானஞ் சுமற்றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்லசெயல்.

(இவை ௯௧-ம் அதிகாரம் பெண்வழிச்சேறல் ௫-வது குறள்.)

கருத்துரை:— மனைவிக்கு அஞ்சுவோன் நல்லோர்க்கு உதவிசெய்ய அஞ்சுவான். (௫௯)

கலிய நாயனார்.

60 எள்ளாவிளக்கரன் பாலேற்றவேவாள்கலியர்
கொள்ளாரேலேதுங் கொடாருலகி—லுள்ளார்கொ
னல்லார்கட்பட்ட வறுமையினின்னாதே
கல்லார்கட்பட்ட திரு.

(இவை ௪௧-ம் அதிகாரம் கல்லாமை ௯-வது குறள்.)

கருத்துரை:— கல்லாதவரிடத்து உண்டாகிய செல்வமானது கற்றவரிடத்து உண்டாகிய வறுமையைப் பார்க்கிலும் துன்பஞ்செய்யும். (௬௰)

சத்தி நாயனார்.

61 அண்ணலடியாரை யிகழ்தார்நரகிலாழாதே
தண்ணளியானுத்தறித்தார் சத்தியா-ரெண்ணமுற

யாகாவா ராயினு நாகாக்கக்காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு.

(இவை ௰௩-ம் அதிகாரம் அடக்கமுடைமை எ-வது குறள்.)

கருத்துரை:— அறிவுடையோர் நாவொன்றையே காக்கக்கடவர் அதனைக்காவாக்கால் சொற்குற்றம் பொருந்தித் துன்பப்படுவர். (௬௧)

ஐயடிகள்காடவர் கோனயனார்.

62 நாடலருநற்பதிகணண்ணிநல் வெண்பாவாய்ந்
தாடலரனுக்களித் தாரையடிகள்—காடவர்கோன்
றுமின்புறுவதுலகின் புறங்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.

இவை ௪௰-ம் அதிகாரம் கல்வி ௯-வது குறள்.

கருத்துரை:— கற்றவர் தாங்கள் இம்பம் அடையுங் கல்விக்கு, உலகத்தார் இன்பம் அடைதலைக்கண்டு, மற்றையர்களும் கற்கத்தொடங்குவர். (௬௨)

சுந்தரமூர்த்தி நாயனார்.

63 நீரூர்முதலையது முன்னுண்டபிள்ளையைப்பின்
னூரார்பாவாலழைப் பித்தார்—பாரூர்
பிறப்பொக்குமெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழின் வேற்றுமையான்.

(இவை ௯௮-ம் அதிகாரம் பெருமை உ-வது குறள்.)

கருத்துரை:— எல்லாமக்களுயிர்க்கும், பொதுவாகிய பிறப்பியல்புஒத்திருக்கும், ஆயினும்பெருமைசிறுமையெனப்பட்ட சிறப்பியல்புகள் அவரவர்கள் செய்யுந்தொழில்களது வேறுபாட்டால் ஒத்திடாவாம் அதனால் தாழ்ந்த தொழிலால் உயர்ந்த குலமும் பெருமை அடையாவாம், உயர்ந்த தொழிலால் இழிந்த குலமும் சிறுமையடையாவாம். (௬௩)

கணம்புல்ல நாயனார்

64 கணம்புல்லர்நெய்வாங்கக் காணார்கணம்பு
விணங்குதலைநெய்விளக் கொன்றிட்டார்-வணங்கன்பாற்
றுன்பமுறவரினுஞ் செய்கதுணிவாற்றி
யின்பம் பயக்கும்வினை.

(இவை கஎ-ம் அதிகாரம் வினைத்திட்பம் கூ-வது குறள்.)

கருத்துரை:— துன்பம்வரினும் துணிவுடன் இன்பந் தரும் தொழில்களைச் செய்யகடவன். (கூச)

காரி நாயனார்.

65 பாரின்மூவேந்தர் பரிசினுதவப்பாடிக்
காரியாராலயங்கள் கட்டினார்—ரோரிடமோ
யாதானுநாடாமாலூ ராமாலென்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு.

(இவை சம-ம் அதிகாரம் கல்வி எ-வது குறள்.)

கருத்துரை:— கற்றவர்க்கு எந்நாடும் தனதுநாடாம் அப்படியிருக்க ஒருவன் மரணபரியந்தமும் கல்வி கற்காதிருப்பது என்ன காரணம். (கூரு)

நெடுமாற நாயனார்.

66 பழுதறுசம்பந்த ரெதிர்பாழமணர்தாழ
வழுவறநெல்வேலி வென்றமாறன்—கழுவிட்டா
னந்தணர்நூற்கு மறத்திற்குமாதியாய்
நின்றது மன்னவன்கோல்.

(இவை ருரு-ம் அதிகாரம் செங்கோன்மை ந-வது குறள்.)

கருத்துரை:— வேதத்திற்கும் தருமத்திற்கும் காரணம் அரசனது செங்கோலாம். கூகூ

வாயிலார் நாயனார்.

67 ஆயறிவுதீபமகமலரன்பேயமுதங்
கோயிலிறைக்கோர்மனமாய்க்கொண்டுவந்தார்-வாயிலா
ரோர்த்துள்ளமுள்ள துணரினொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டாபிறப்பு.

(இவை ருகூ-ம் அதிகாரம் மெய்யுணர்தல் எ-வது குறள்.)

கருத்துரை:— ஆசிரியனிடத்தில் கேட்கப்பட்ட உபதேசப்பொருளை ஒருவனது உள்ளமானது நிச்சயப்பட பிரமாணங்களாலும் யுக்தியினாலும் ஆராய்ந்து அதனால் முதற்பொருளை அறியுமாயின் அவனுக்குப் பிறவியுள்ளதாகச் சந்தேகித்து நினைக்கவேண்டாம். (கூஎ)

### முனையடுவார் நாயனார்.

68 வினையடுவார்வந்தடுக்க வென்றுகொண்டகூலி
தனையடுவார் சைவர்தமக்கே—முனையடுவார்
தாளாற்றித்தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற்பொருட்டு.

(இவை ௨௨-ம் அதிகாரம் ஒப்புரவறிதல் ௨-வது குறள்.)

கருத்துரை:— முயற்சிசெய்து சம்பாதித்த பொருளெல்லாம் உபகாரம்செய்யும் பொருட்டேயாம். (௬௮)

### சுந்தரமூர்த்தி நாயனார்

69 தென்புகலூரீசனையுஞ் சென்றுபணிந்தாரூரர்
பொன்புகலாப்பெற்றார் புகழ்பெற்றா—ரின்புற்றா
ரொண்பொருள்காழ்ப் பவியற்றியார்க்கெண்பொரு
ளேனையிரண்டு மொருங்கு

(இவை ௭௬-ம் அதிகாரம் பொருள்செயல்வகை ௰-வது குறள்)

கருத்துரை:—நல்வழியால்வரும் பொருளை மிகவும்உண்டாக்கினவர்க்குத்தருமமும் இன்பமும் எளியனவாம் (௬௯)

### கழற்சிங்க நாயனார்.

70 தொழச்சங்கரன்சூடாத் தூய்மலர்மோந்தாள்கை
விழச்சென்றரிந்து விடுத்தார்—கழற்சிங்க
ரோர்ந்துகண்ணோடாதிறை புரிந்தியார்மாட்டுந்
தேர்ந்துசெய்வஃதே முறை.

(இவை ௫௫-ம் அதிகாரம் செங்கோன்மை ௧-வது குறள்.)

கருத்துரை:— அரசன் குற்றத்தை ஆராய்ந்து எல்லாரிடத்தும் நடுவுநிலைமை பொருந்தி அரசாள்வதே செங்கோலாம், செங்கோல்நீதி. (௭௰)

### இடங்கழி நாயனார்.

71 நடங்கழியாரன்பிற்கேநற் பொருள்களெல்லா
இடங்கழியாரன்பினெடுத் தீந்தார்—முடங்கா
வருளென்னுமன்பீன் குழவிபொருளென்னுஞ்
செல்வச் செவிலியாலுண்டு,

(இவை எசு-ம் அதிகாரம் பொருள்செயல்வகை எ-வதுகுறள்.)

கருத்துரை:— அன்பால் ஈன்றிடப்பட்ட அருளென்னும் குழந்தையானது பொருளென்னும் செவிலித்தாயால் வளரும் அதாவது, அருளும் அன்பும, பொருளன்னியில், பயன்படாவாம், அருளும், அன்பும் இல்லார்க்கு, பொருளும் பயன்படாவாம், (எக)

## செருத்துணைநாயனூர்.

72 கருத்தனணிபூவைக் கழற்சிங்கன்றேவி
யருத்தியின்மோந்தாண் மூக்கரிந்தார்—செருத்துணை
வாளொடென்வன் கண்ணரல்லார்க்குநூலொடு [யார்
னுண்ணவையஞ்சுபவர்க்கு.

(இவை எசு-ம் அதிகாரம் அவையஞ்சாமை கூ-வது குறள்.)

கருத்துரை:— வீரமில்லாதவர்க்கு வாளாயுதத்துடன் என்ன சம்பந்தம் உண்டு, அதுபோலக்கல்வியைகற்றுச்சபைக்குஅஞ்சுவோர்க்குநூலோடுஎன்னசம்பந்தமுண்டு. (எஉ)

## புகழ்த்துணை நாயனுர்.

73 வற்கடம்வந்தூண்போய் மெய்வாடியபுகழ்த்துணைகை
நற்கலசம்வீழவரனுர்கொடுத்தார்பொற்காசு
தெய்வத்தானுகாதெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்.

இவை சுஉ-ம் அதிகாரம் ஆள்வினையுடைமை கூ-வது குறள்,

கருத்துரை:—தெய்வத்தால் முயற்சி செய்ததொழில் விதிவகையால்க் கருதிய பயனைத்தாராதாயினும் முயற்சியானது தனக்கு இடமாகிய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவுதரும் (பாழாகாது.) (எஉ)

## கோட்புலி நாயனுர்.

74 பொலிகிளைகொன்றூர் கோட்புலியார்விரையாக்
கலிகடந்த குற்றங்களைந்தா—ருலகிற்
குடிபுறங்காத்தோம்பிக் குற்றங்கடிதல்
வடுவன்று வேந்தன்றொழில்.

(இவை ௫௫-ம் அதிகாரம் கொடுங்கோன்மை ௯-வது குறள்.)

கருத்துரை—குடிகளைக்காத்துக்குற்றங்களைப்போக்குவது அரசனது தொழில்களாம். (௭௪)

### சுந்தரமூர்த்தி நாயனார்.

75 மாவணங்கைக்கொண்டிடு முன்வந்தரனார்சுந்தரர்க்கோ
ராவணங்கைக்கொண்டுமெறித்தாட்கொண்டார் —நோவ
வழச்சொல்லியல்ல திடித்துவழக்கறிய
வல்லார் நட்பாய்துகொளல்

(இவை ௮௰-ம் அதிகாரம் நட்பாராய்தல் ௫-வது குறள்.)

கருத்துரை:— ஒருவன் பாவங்களைச்செய்ய நினைத்தால் அழும்படிச்சொல்லி விலக்கியும் அப்பாவங்களைச் செய்யாதிருக்கும்படி நெருக்கியும், உலகநடையைச் செய்விக்க வல்லவரைச் சிநேகிக்கக்கடவர், (உலகநடை) மேலோர்களின் செய்கை. (௭௫)

### பத்தராய்ப் பணிவார்கள்.

76 வாய்ப்பவரனைத்தொழுதுவாய் குழறிக்கண்ணருவி
தோய்ப்பநடுங்கிப் புளகித்தோர்பத்த—ராய்ப்பணிவா
ரன்பின்வழிய துயிர் நிலையஃதிலார்க்
கென்புதோல் போர்த்தவுடம்பு.

(இவை ௮-ம் அதிகாரம் அன்புடைமை ௰-வது குறள்.)

கருத்துரை:— அன்பொடு பொருந்திய உடலே உயிருள்ள உடலாகும் அவ்வன் பில்லாவுடலே உயிரற்றவுடலாகும். (௭௬)

### பரமனையே பாடுவார்.

77 பரமனையேபாடுவார் பாடும்புகழா
லிருவினையுஞ் சேராரிவரே—மருளா
மிருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு

(இவை ௧-ம் அதிகாரம் கடவுள் வாழ்த்து ௫-வது குறள்.)

கருத்துரை:— கடவுளுடைய கீர்த்தியை விரும்பினவரிடத்து நல்வினை தீவினைகள் இரண்டும் சேராவாம். (௭௭)

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்.

78 அத்தனடியல்லாலறம் பொருளின்பங்களிலே
சித்தமலையார் சித்தத்தைச்சிவன்பால்—வைத்தார்தாம்
பற்றுகபற்றற்ருன் பற்றினையப்பற்றைப்
பற்றுகபற்று விடற்கு.

(இவை ௩௫-ம் அதிகாரம் துறவு ௰-வது குறள்.)

கருத்துரை:— பற்றற்றபரம் பொருளைப்பற்றும் பொருட்டு முத்திவழியைப் பற்றக்கடவர். (௭௮).

திருவாரூர்பிறந்தார்

79 மன்னுதிருவாரூர்மதில் வட்டத்துப்பிறந்தா
ருன்னுசிவகணத்தினுற்றுயர்ந்தா—ரின்னே
நிலத்திற்கிடந்தமைகால் காட்டுங்காட்டுங்
குலத்திற்பிறந்தார் வாய்ச்சொல்.

(இவை ௯௬-ம் அதிகாரம் குடிமை ௬-வது குறள்.)

கருத்துரை:—நிலத்தின் இயல்பை முளைகாட்டும் அதுபோலக்குலத்தின் இயல்பைவாய் மொழிகாட்டும், கால், என்றது, முளை. (௭௯)

முப்போதுந்திருமேனி தீண்டுவார்.

80 கருமேனியன்பாற்கழீ இமுப்போதுந்
திருமேனிதீண்டுவார் சீர்வாழ்—வொருவா
பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ்வார்.

(இவை க-ம் அதிகாரம் கடவுள் வாழ்த்து ௬-வது குறள்.)

கருத்துரை:— மெய்வாய் கண் மூக்குச்செவி யென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையுங்கெடுத்தவனது மெய்யான நல்லநெறியின்கண்வழுவாது நின்ருர் பிறப்பின்றி யெக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார். (௮௰)

முழுநீறுபூசிய முனிவர்.

81 அழுதிசனைநினைந்தேயஞ் சுபதஞ்சொல்லி
முழுநீறணிவார்தா முட்டார்—பழுதறினு
மொல்லும்வகையான றவினையோவாதே
செல்லும்வா யெல்லாஞ்செயல்.

(இவை ௪ம் அதிகாரம் அறன்வலியுறுத்தல் ௩-வது குறள்.)

கருத்துரை:— தங்கள் தங்களுக்குக் கூடும்வகையால் தருமமாகிய நல்வினையை இடைவிடாமல் அது செல்லுமிடங்களிலெல்லாம் செய்யக்கடவர். (அக)

அப்பாலுமடிச்சார்ந்தார்

82 பாடுமுனைப்பாடியர்கோன்பாடலின்மெய்ப்பாடகங்கொண்
டாடுவரப்பாலுமடிச் சார்ந்தார்—நீடரன்பாற்
கற்றீண்டுமெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டுவாராநெறி.

(இவை ௩௬ம் அதிகாரம் மெய்யுணர்தல் ௬-வது குறள்.)

கருத்துரை:— இம்மையிலே உபதேசத்தை ஞானசிரியரிடத்தேகேட்டு அதனால் உண்மைப்பொருளை உணர்ந்தவர் திரும்பி இப்பிறப்பினிடத்து வாராதவழியை அடைவார்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

83 பித்தனெனவைதாற்பிழை பொறுத்தன்மாத்திரமோ
வத்தராரூரர்க்கருள் புரிந்தார்—நித்த
மழிவந்தசெய்யினு மன்பறாரன்பின்
வழிவந்த கேண்மையவர்.

(இவை ௮௧-ம் அதிகாரம் பழமை ௭-வது குறள்.)

கருத்துரை:— பழமையான நட்பினை உடையவர் பிறர் அழிவானவற்றைச் செய்தாலும் அன்பைவிட்டு அகலார்.

பூசலார் நாயனார்.

84 வானமுதற்றாவிவரை மனத்தேகாட்டியரன்
றானமரப்பூசலார் தாபித்தார்—ஞான
மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

(இவை ௧ம் அதிகாரம் கடவுள் வாழ்த்து ௩-வது குறள்.)

கருத்துரை:— கடவுள் திருவடிகளைச் சேர்ந்தவர்கள் மோட்சத்தில் வாழ்வார்கள். (அச)

மங்கையர்க்கரசியார்.

85 ஞானசம்பந்தரங்கே நண்ணியபினெண்ணிலா
தானிவிளைவித்தாளே யமணர்க்கு—மானியார்
கொக்கொக்ககூம்பும் பருவத்துமற்றதன்
குத்தொக்க சீர்த்தவிடத்து.

(இவ்வை சகூ-ம் அதிகாரம் காலமறிதல் ய-வது குறள்.)

கருத்துரை:— அரசன் தன் பகைஞரை வெல்லக்காலம் வாய்க்காத இடத்துக்கொக்கு அடங்கல்போல அடங்கி அதனைப்போற் தப்பாமற்செய்து முடிக்க (அரு)

நேச நாயனர்.

86 ஈசருடைமெய்யடியார்க்கே தேனுஞ்செய்வனென்று
நேசருடைகோவணங்கி னெய்தளித்தார்—ராசைபுரிந்
தன்றறிவாமென்னுதறஞ் செய்கமற்றது
பொன்றுங்காற் பொன்றுத்துணை.

(இவை சு-ம் அதிகாரம் அறன்வலியுறுத்தல் கூ-வது குறள்.)

கருத்துரை:— இறக்கும்போது தருமம் செய்வோமென்றெண்ணாது இருக்கும்போதே தருமஞ்செய்க அத்தருமம் இறக்கும்போது உதவியாம். (அசு)

இதுமுதல் உ-வெண்பா கோச்செங்கட்சோழ நாயனர்.

87 முந்திகலாற்செங்கணன் மூண்டானைக்காவினும்பின்
தந்திபுகாவாயில் சமைத்தானே—யெந்தைக்
குடப்படிலாதவர் வாழ்க்கைகுடங்கருட்
பாம்போடுடனுறைந்தற்று

(இவை அகூ-ம் அதிகாரம் உட்பகை ய-வது குறள்.)

கருத்துரை:—மன ஒற்றுமை இல்லாருடன் கூடிவாழும் வாழ்க்கையானது ஒரு குடிசையுள்ளே, பாம்புடன் கூடிவாழ்தல் போலாம். (அஎ)

88 சிலம்பிபாய்நூற்கோயில் செய்த செங்கணன்பின்
றலங்கொடோறுங்கோயில் சமைத்தார்—நலங்கூர்
தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார் மற்றல்லா
ரவஞ்செய்வா ராசையுட்பட்டு.

(இவை உஎ-ம் அறிகாரம் தவம் கூ-வது குறள்.)

கருத்துரை:— தவத்தோர் தவகாரியங்களைச் செய்வர் மற்றவர் அவகாரியங்களைச் செய்வர். (அஅ)

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனர்.

89 கானத்திருநீலகண்ட யாழ்ப்பாணரைப்பான்
ஞானத்தலைவருக்கு நட்பினரார்—மானத்து

மேற்பிறந்தாராயினுங் கல்லாதார்கீழ்ப்பிறந்துங்
கற்றாரனைத்திலர்பாடு.

(இவை சகம் அதிகாரம் கல்லாமை கூ வது குறள்.)

கருத்துரை:— கல்லாதவர் மேலாகிய குலத்திற் பிறந்தாராலும் கீழ்க்குலத்திற் பிறந்து கற்றவரை யொப்பாகார். (அகூ)

சடையநாயனார்.

90 ஆம்பற்றினாற்சடையராலாலசுந்தரரைத்
தாம்பெற்றபேறேதவப்பேறே—யோம்பிப்
பெறுமவற்றுள்யாமறிவதில்லையறிவறிந்த
மக்கட்பேறல்லபிற.

(இவை எ-ம் அதிகாரம் புதல்வரைப் பெறுதல் க-வது குறள்)

கருத்துரை:— பெறும் பேறுகளுக்குள் அறியவேண்டியவைகளை அறிந்தமக்கட் பேற்றையல்லது பிறபேற்றை யாம் மதிக்கவேண்டியது இல்லை. (கூ0)

இசைஞானியார்.

91 உற்றவிசைஞானிதானோங்கு புகழ்ச்சுந்தரரைப்
பெற்றதினுமன்புமிகப் பெற்றாளே—முற்றறிவா
லீன்றபொழுதிற் பெரிதுவக்குந்தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்.

(இவை புதல்வரைப் பெறுதல் கூ-வது குறள்.)

கருத்துரை:— தன்மகனை கல்வியில் வல்லவன் எனக் கேட்ட தாயானவள் பெற்றகாலத்தைக் காட்டினும் பெறு மகிழ்ச்சியை அடைவாள். (கூக)

இதுமுதல் கூ-வெணபா சுந்தரமூர்த்திநாயனார்.

இதற்கு குறளின் அதிகாரமும் குறளின் விபரமும் கண்டுகொள்.

ளா0-ம் அதிகாரம் குறிப்பறிதல் 0 வது குறள்.
ளா0ரு-ம் அதிகாரம் அலரறிவுறுத்தல் கூ-வது குறள்.
ளா0க-ம் அதிகாரம் புணர்ச்சி மகிழ்தல் உ-வது குறள்.
எகூ-ம் அதிகாரம் நட்பு கூ-வது குறள்.
உஎ-ம் அதிகாரம் தவம் ரு-வது குறள்.
கூஅ-ம் அதிகாரம் பெருமை அ-வது குறள்.
0 ம் அதிகாரம் இனியவைகூறல் ரு-வதுகுறள்
எகூ-ம் அதிகாரம் நட்பு கூ-வது குறள்.
சஉ-ம் அதிகாரம் கல்வி க-வது குறள்.

92 கனிந்திலதையங் கண்டார் கமலினியுங்காவி
லனிந்திதையுஞ்சுந்தரர்கண்டாங் கேபுணைந்துரைதென்
கண்ணொடு கணணிணை நோக்கொக்கின்வாய்ச்சொற்க
ளென்ன பயனுமில.
(இவை ௱௰ம் அதிகாரம் குறிப்பறிதல் ௰ வது குறள்.)
கருத்துரை:—இருவர் பார்வையும் ஒக்குமாகில், வாய்ச்சொற்கள் பயனில்லை. (௯௨)

93 சுந்தரரைக்கண்டலர்கொய்தோகையர்சென்றொருநா
ளெந்தைகயிலைக்கிறை யாலின்றளவும்—வந்ததே
கண்டதுமன்னு மொருநாளலர் மன்னுந்
திங்களைப்பாம்பு கொண்டற்று.
(இவை அலரறிவுறுத்தல் ௯-வது குறள்.)
கருத்துரை:—தலைவனைநான்காணப்பெற்றது ஒருநாளே யாம் அதனாலே உண்டான அலரானது அவ்வளவுஇல்லாமல் சந்திரனைப் பாம்பு கொண்ட அலர்போல் எங்கும்பரந்தது.()

94 அங்கருளாலாரூர ராசையறவே பரவை
சங்கிலியார் மானோய் தவிர்ப்பித்தா—னெங்கோன்
பிணிக்குமருந்து பிறமனணியிழை
தன்னோய்க்குத்தானே மருந்து.
இவை ௱௰௧-ம் அதிகாரம் புணர்ச்சி மகிழ்தல் உ-வது குறள்.
கருத்துரை:— முப்பிணிகளுக்கு மருந்துவேறே உள்ளன ஆபரணத்தைஉடையவள் தன் காமநோய்க்குத்தானே மருந்தானாள், முப்பிணி, வாதபித்த சிலேட்மம். (௯௪)

95 சீரூர்கயிலையினுஞ் செல்லுநாள்வில்லவனை
யாரூர்சிந்தித தழைத்திட்டா—ரோரா
முகநகநட்பது நட்பன்றுநெஞ்சத்
தகநக நட்பது நட்பு.
(இவை ௯-ம் அதிகாரம் நட்பு ௬-வது குறள்.)
கருத்துரை:— முகம்மலர்ந்து சினேகிப்பது சினேகம் அல்ல, அகம்மலர்ந்து சினேகிப்பதே சினேகமாம். (௯௫)

96 தள்ளாது சேரரொடு தாங்கயிலைக்காரூரர்
வெள்ளானை மேற்சென்றார் விண்ணூறு—யுள்ளமிசை
வேண்டியவேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப்படும்.

(இவை எஉம் அதிகாரம் தவம் ரு-வது குறள்.)

கருத்துரை:— மறுமையில் வேண்டிய பயனை அடைதலால் இம்மையிலேதவங்களைச்செய்து முடிக்கக்கடர்.(கூசு)

97 நாவலர்வெள்ளானை நடாத்தவுபமன்னியர்போ
லாவலுடன் சென்றுபணிந்தார்களோ—தேவர்
பணியுமாமென்றும் பெருமைசிறுமை
யணியுமாந்தன்னை வியந்து

(இவை கூஅ ம் அதிகாரம் பெருமை அ--வது குறள்.)

கருத்துரை:— பெருமையுடையவர் சிறப்பு உண்டாகிய காலத்தும் அடங்கி நடப்பார். சிறுமை உடையவர் சிறப்பு இல்லாக்காலத்தும் தம்மை சிறப்பித்து நடப்பார்.(கூஎ)

98 பாலாழியுண்ட பழமுனிசொன்னன் முனிவர்க்
காலாலசுந்தரன் சொலங்கினிதாய்—மேலாம்
பணிவுடையனின் சொலனுதலொருவற்
கணியல்ல மற்றுப்பிற.

(இவை ய்-ம் அதிகாரம் இனியவைகூறல் ரு-வது குறள்.)

கருத்துரை:-ஒருவனுக்குஇன்சொல்லேஆபரணமாம்()

99 தம்முடையதோழர்வரத் தம்முடையதோழரையும
வம்மினெனவண்கயிலை வாழ்வித்தா—ரெம்மிறைவர்
நட்பிற்குவீற்றிருக்கை யாதெனிற்கொட்பின்றி
யொல்லும்வா யூன்றுநிலை.

(இவை எகூ-ம் அதிகாரம் நட்பு கூ-வது குறள்.)

கருத்துரை:—நட்பினுக்கு அரசிருக்கை யாதெனின் அஃதுஎஞ்ஞான்றுந்திரிபின்றி இயலுமேல்லையெல்லாம்அறம் பொருள்களிற்றளராதுத்தாங்குந்திண்மையாம். (கூகூ)

### ஆதி உலாவின் சிறப்பு

100 சொல்வைத்தசேரனுலாச் சொல்லக்கயிலையரன்
செல்வத்திருச்செவியிற் சேர்ந்ததே—மல்வைத்த
செல்வத்துட்செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந்தலை.

இவை சஉ-ம் அதிகாரம் கேள்வி க-வது குறள்.)

கருத்துரை:— ஒருவனுக்கு சிறப்புடைய செல்வமாவது கேள்விச்செல்வமாம் அச்செல்வம் எல்லாச்செல்வங்களினும் தலைமையாம். (ா)

இதில் வேண்பா இரண்டடியிலுள்ள

# அரும்பத விளக்கம்

(௧) கவி-பூ பூமி-ஆயிரம்-சகஸ்திரம்-(௨) மா-யானை-உரன் திண்மை-தோட்டி-அங்குசம்-வரன்-முத்திக்குரியன்-வைப்பு-உலகம் (௩) மயற பகை காமப்பகை (௪) உய்வித்தவன்-சிவன். (௫) பொருளாய்-மெய்த்தவவேடமாய் (௬) அறன் தருமத்தையுடையவன் (௯) பத்தர்-சிவகாமியாண்டார் மூளி-புஷ்பக்குடலை. (௰) ஆனாத-கெடாத (௰௨) விளைந்தார்-திருப்பனந்தாளீசர். (௰௩) பஞ்சவடி-மயிர்ப்பூணூல் சுதை-மகள் (௰௪) கமர்-பிளப்பு தாயர்-அரிவாட்டாய நாயனார் களம்-கண்டம். (௰௫) அந்தி-சந்தியகாலம். (௰௬) உதகம்-நீர். (௨௩) புலவி பிணக்கு, (௨௯) மருணீக்கியார்-அப்பர்சுவாமிகள். (௩௩) வாய்மருந்து உமிநீர் சலம்-கோபம். (௩௪) நக்கு-சிரித்தல். (௩௫) ஆறாறு-தத்துவம் முப்பத்தாறு ஐயாறு-திருவையாறு ஆறு-வழி (௪௨) பரகாயம்-கூடுவிட்டுக்கூடுபாய்தல் ஆய்ச்சி-இடைச்சி. (௪௩) அந்தராய்-குருடராய். (௪௪) உருளாயம்-சூது. (௪௬) அருட்டுறை-திருவருட்டுறையென்னும் தலம். (௪௮) அனம்-சோறு. (௫௫) ஏழேழ்புலவர்-சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதுபேர். (௬௨) ஆடல்-நடனம். (௬௬) புகலா-இலேசாக (௭௨) அருத்தி-அன்பு. (௭௩) வற்கடம்-பஞ்சகாலம் (௭௪) கிளை-பந்துக்கள். (௭௫) மா-இலக்குமி-ஆவணம்-முறிச்சீட்டு (௮௰) கரு-அழகு. (௮௧) அஞ்சுபதம்-பஞ்சாக்கரம் (௮௩) மானியார் மங்கையர்க்கரசியார். (௮௭) இகல்-பகை. (௯௨) அனிந்திதை-பரவைநாச்சியார்-கமலினி சங்கிலிநாச்சியார். (௯௫) வில்லவன்-விற்கொடியுடையசேரன். (௯௮) பாலாழியுண்டமுனி-உபமன்யர். (௯௯) தோழர்-சுந்தரமூர்த்திநாயனார்-தோழரை-சேரமான்பெருமானாயனார் (௱) சொல்-கீர்த்தி.

பெரியபுராணச்சரித்திரவெண்பாமாலைமுற்றிற்று.

இப்புத்தகம் வேண்டியவர்கள் தஞ்சாவூர் சவுளிச்செட்டிதெரு சுப்புசெட்டியார் வீட்டில் விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு,

அ. நாராயண சரணர்.